தமிழருடன் விளையாடும் சிங்களப் பேரினவாதம்



எங்கள் இனப்பிரச்சனை இத்துணை தூரம் சென்றிருக்க கூடாது. மனிதம் செத்துவிட்டது. ஒருநாளைக்கு குறைந்தபட்சம் பத்து உயிர்களாவது மண்ணிலிருந்து விண்ணுலகத்திற்கு பலவந்தமாக அனுப்பப் படுகிறது. அவசர மருத்துவ உதவிகள் மறுக்கப்படுகிறது. வடக்கு கிழக்கில் இன்று செய்திப் பத்திரிகைகளில் வருவதைவிட அநியாயம் நிகழ்கின்றது.

ஒருவேளை சாப்பாட்டுக்கு கூட கையேந்தி வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. உணவுப் பொருட்களை அரசாங்கம் தமிழர் பகுதிக்கு கொண்டு செல்ல தடுக்கிறது. ஆனால் வெளியிலிருந்து விமர்சனம் செய்து எங்கள் தலைவிதியை நிர்ணயிக்கப் பார்க்கிறது ஒரு கூட்டம்.

வெளியுலகிலிருந்து குறிப்பாகத் தமிழகத்திலிருந்து தமிழ் மக்களுக்காக ஒலிக்கும் ஒடுக்கி விடுவதற்காக எமமவர்களே சிங்களப் பிரச்சாரகர்களாக மாறியிருப்பது கொடுமையிலும் கொடுமை

தமிழனின் உயிர்களுக்கு மதிப்பே இல்லாத நிலை சிறிலங்காவெங்கும் நிலவுகிறது. செய்திப் பத்திரிகையை எடுத்துப்பார்த்தால் உங்களுக்குத் உங்களுக்கு நிலமை புரியும்.

'மட்டக்களப்பில் ஒருவர் வெள்ளைவான் கும்பலால் கடத்தல்' 'யாழ்ப்பாணத்தில் இருவர் சுட்டுக்கொலை' 'வாழைச்சேனையில் கைக்குண்டு வீச்சு' இப்படிப்பட்ட செய்திகளே பெரும்பான்மையாக இருக்கும்.

போரினால் வடக்கு கிழக்கில் மக்கள் தினம் தினம் செத்துப் பிழைக்கின்றார்கள். ஆனால் கொழும்பில் குண்டு வெடிக்கும் என்ற பயத்தினைத் தவிர சிங்கள மக்களுக்கு எந்தக் குறையுமில்லை. இந்தப் போர் குண்டுப் பயத்தைத் தவிர வேறெந்த தாக்கத்தையும் இங்குள்ள சிங்கள சகோதரர்களுக்குத் தரவில்லை. என்ன சில வேளைகளை பாதுகாப்பு கெடிபிடிக்குள் தமிழர்களோடு அவர்களும் ஆளாக வேண்டியுள்ளது அதுமட்டும் தான் அவர்களுக்கு உள்ள பிரச்சனை. மிஞ்சிப்போனால் ஒரு குண்டுவெடிப்பு இங்கு அப்படி வெடிக்கும் குண்டுகளும் அரசுக்கே சாதகமாக முடிகிறது.

ஒரு இடப்பெயர்வின் வலி, ஒரு அநியாய உயிரிழப்பின் வலி இங்கு பெரிதாக கணக் கெடுக்கப்படுவதாக எனக்குப் படவில்லை. எத்தனை தமிழன் செத்தாலும் எத்தனை ஏழை சிங்கள இராணுவத்தினர் செத்தாலும் நாங்க யுத்தத்தில புலிகளை தோற்கடிச் சுடுவோம்,7000 பேர் கொண்ட ஒரு சிறு குழு தானே புலிகள் எங்களுக்கு தமிழ் சனநாயக வாதிகளினதும் (?) சர்வதேசத்தினரதும் முழு ஆதரவும் உண்டு, இந்தியாவின் ஆதரவும் உண்டு. இன்னும் கொஞ்ச காலம் தான் இருக்கு புலிகளை பூண்டோடு அழித்து விடுவோம் இப்படித்தான் கொழும்பில் பேச்சு.

யுத்தத்தின் மூலம் புலிகளை அழிக்கவேண்டும் எனக் கூறும் பத்திரிகையாளர்களுக்கும் சரி, சாதாரண சிங்கள மக்களுக்கும் சரி வட கிழக்கில் யார் செத்தாலும் அவன் புலி என்பதில் அசையாத நம்பிக்கை உடையவர்களாய் இருக்கிறார்கள்.

கொழும்பில் யுத்தத்தின் மூலம் புலிகளை அழிக்கவேண்டும் எனக்கூறும் பத்திரிகையாளர்களும் சரி, சாதாரணமாக என்னோடு வேலை செய்யும் சக பணியாளர்களும் சரி வட கிழக்கில் யார் செத்தாலும் அவன் புலி என்பதில் அசையாத நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறார்கள்.

அங்கு மக்கள் இல்லை எல்லாம் புலிதானா..? அப்படி என்றால் மக்களைப் பாதுகாக்கவே இலங்கை அரச பாதுகாப்புப்படை அங்கு இருக்கிறது எனும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கூற்று சற்று நெருடலாக இருக்கிறது.

இவர்களைப் பொறுத்தவரை தமிழ் ஒட்டுக்குழுக்களைப் போல போல் புலிகள் அழிந்தால் மட்டும் சரி என எண்ணுகிறார்கள் மனிதம், மனித உரிமைகள், மக்கள் எல்லாம் வடக்கு கிழக்கில் இல்லை.

சரி நான் சொல்ல வந்த விடயத்துக்கு வருகிறேன். சிங்கள பத்திரிகையாளர்களோ, அல்லது சிங்கள மக்களுக்கோ நாட்டின் இன்றைய நிலை குறித்த எந்தவிதமான அடிப்படை அறிவும் இல்லை.

சிங்களப் படைகள் இன்னும் இரண்டு மாதங்களில் கிளிநொச்சியைக் கைப்பற்றி விடும். அதனைத் தொடர்ந்து யுத்தம் முடிந்து விடும். பிறகு நாடு முழுவதும் சிங்களவருக்குச் சொந்தமாகிவிடும். நாடு சுபீட்சமடையும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கற்பனைக் கனவு காரணமாய் கழுத்தையே நெரிக்கும் வாழ்க்கைச் செலவைப் பற்றிக் கூடக் கவலைப்பட அவர்களுக்கு நேரமில்லை.

சரத் பொன்சேக்கா அவர்களுக்கு மற்றொரு துட்டகைமுனுவாகத் தெரிகிறார். மஹிந்த ராஜபக்ச அத்தனை சவால்களையும் சந்திக்கக் கூடிய அசாமான்ய தலைவராகத் தெரிகிறார்.

அதனால் தான் 4 ஆண்டுகளுக்கு முன்னர் 70 வீதமான மக்கள விரும்பிய சமாதானம் இன்று 25 வீதமானவர்களால் மட்டும் விரும்பப்படுகிறது.

வட கிழக்கில் சனம் படும் பாடு இவர்களுக்கு தெரியாது. ஒரு நேர சாப்பாட்டுக்கு, நிம்மதியான நித்திரைக்கு எதுக்குமே வழியில்லாமல் அலையும் அப்பாவித் தமிழ் மக்களின் துன்பங்கள் இவர்களுக்குத் தெரியாது.

இங்கு இப்போதைக்கு வழியில்லை. ஆனால் கொழும்பில் நேர்மாறாகத்தான் இருக்கின்றது. இலங்கை வந்து பாருங்கள் இங்கு வந்து பார்க்கும் எவருக்கும் தெரியும் வட கிழக்கு இலங்கையின் ஏனைய மாவட்டங்களை விட எத்துனை தூரம் பின்தங்கியிருக்கிறது. எங்கள் கல்விச்செல்வம் எப்படி தட்டிப் பிடுங்கப்பட்டிருக்கிறது என்பதை.

இப்போது படித்த தமிழ்ச் சமூகம் இங்கு குறைந்து கொண்டு செல்கிறது. நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு நீண்ட கால நோக்கில் அழிக்கப்பட்டு வருகிறோம். அது பொருளாதார ரீதியாக, அறிவு ரீதியாக மனிதவள ரீதியாக இப்போது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அழிக்கப்படுகிறது. ஆனால் இலங்கை அரசின் ஒரு நீண்ட கால நோக்கத்திற்கு வலுச்சேர்க்கிறது.

போகிற போக்கில் பாருங்கள் வட கிழக்கில் ஒருவர் சளி காய்ச்சல் வந்து செத்தாலும் செத்தவன் புலி, அல்லது புலியால் சாகடிக்கப்பட்டவன் என்றுதான் சிங்கள சனம் நம்பும் நம்ப வைக்கத்தான் இங்க நிறைய பத்திரிகைகளும் மேற்கூறிய பத்திரிகையாளர்களும் இருக்குறாங்கங்கோ.

போர்முனையில் பெரும் மாற்றம் எப்போதும் நிகழலாம் என்பதை அறியாமல் சந்தோசிக்கும் இவர்களுக்காய் என்னுடைய ஆழ்நத அநுதாபங்கள்

- யாரோ (online tamil.blogspot.com)

அன்புள்ள அப்பாவுக்கு

அன்புள்ள அப்பாவுக்கு
ஆசை மகனின் அன்புக் கடிதம்.

இங்கு குளிரூட்டப்பட்ட அறை
கணிப்பொறி,பணி எனினும்
நீ உழுத கரிசல்காட்டின்
மணமின்னும் மறக்கவில்லை.

ஏர்பிடித்துக் காய்த்துப்போன
உன் கரங்கள்
இன்னும் என் கைப்பிடியில்
என்னை வழிநடத்தி..

வெயில் மழையில்
நீ நனைந்த காட்சிகள்
இன்னும் பெரம்மலாட்டங்களாய்
என் கடைக்கண்ணில்..

நான் ஏற முதுகு தந்தாய்
வறுமையென்னும் கிணற்றிலிருந்து!

நான் எங்கும் நகர்வதில்லை
உன் கைபற்றாமல்..

கூலிகளாய் தொடர்ந்துவந்த
தலைமுறைகள்..
மாறியது என்னில்
மாற்றியவன் நீ.

எனக்குத் தெரியும்
உன் ஒருவேளை கஞ்சியும்
என் பள்ளி நோட்டுகள்.

விடைகொடு அப்பா
ஏருக்கும் கலப்பைக்கும்
புறப்படு இனி உலகம் சுற்றலாம்.

- முகிலன்

Engine Tec Motors

அனைவருக்கும் கிறிஸ்மஸ் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

We Offer Facilities For:

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre-MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்.

Ask for **Vel** or **Rajan**
Tel: **020 8640 8000** / **020 8640 1230**
Mob: **07860 226 476 / 07860 770 945**

Unit 5, 339 London Road,
Mitcham, Surrey CR4 4BE
Email: vel@etmluk.com
Web:www.etmluk.com